அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

# ஆண்டு 11

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
20

சுட்டெண்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. 12
   2. 30
   3. 20
   4. 100

2. தனித்தமிழுக்கு வித்திட்டவர்
   1. பரிதிமாற்கலைஞர்
   2. கார்டுவெல்
   3. பாரதிதாசன்
   4. பாரதியார்

3. கண்திறத்தல் என்ற மரபுச்சொற்றொடரின் கருத்து
   1. உதவுதல்
   2. அறிவுண்டாதல்
   3. கண்டிப்பின்மை
   4. ஏமாற்றுதல்

4. யாழ்ப்பாணப் பொதுநூலகக் கட்டடத்துக்கான வரைபடத்தை வடிவமைத்தவர்
   1. இரா. இரங்கநாதன்
   2. ஐசாக் தம்பையா
   3. அல்பிரட் துரையப்பா
   4. கே.நரசிம்மன்

5. வினைப் பகாச்சொல்
   1. எடு
   2. பொன்னன்
   3. வாடின
   4. வீடு

6. சிறுவன் அக்கம்பக்கம் பார்த்து வீதியைக் கடந்தான். அக்கம்பக்கம் என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. அடுக்கிடுக்குத்தொடர்
   3. இணைமொழி
   4. இரட்டைக்கிளவி

7. 1948இல் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்
   1. யே.ஆர். செயவர்த்தனா
   2. டி.எசு. சேனநாயக்கா
   3. சிறிமாவோ பண்டாரநாயக்கா
   4. எசு.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்கா

8. மென்தொடர்க் குற்றியலுகரம்
   1. முத்து
   2. மார்பு
   3. படகு
   4. அன்பு

9. சயிக்கிள் என்ற பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
   1. பேருந்து
   2. நீருந்து
   3. மிதியுந்து
   4. சிற்றுந்து

10. கிளி பேசும். அதுபோல கோழி
   1. அகவும்
   2. கொக்கரிக்கும்
   3. கத்தும்
   4. கீச்சிடும்

11. திருவள்ளுவர், திருக்குறளில் மாந்த வாழ்வியலின் முதன்மைத் தளங்களாக வகுத்தவை
   1. அறம், பொருள், இன்பம்
   2. உணவு, உடை, உறையுள்
   3. இயல், இசை, நாடகம்
   4. மா, பலா, வாழை

12. தென்னை + தோப்பு என்பதைப் புணர்த்தினால்
   1. தென்னைத்தோப்பு
   2. தென்தோப்பு
   3. தென்னந்தோப்பு
   4. தென்னத்தோப்பு

13. தமிழ்த்தேசியச் சிந்தனையைத் தனது கவிதைகள் ஊடாகப் பரப்புரை செய்தவர்
   1. புதுவை இரத்தினதுரை
   2. சின்னத்தம்பிப்புலவர்
   3. தேவநேயப்பாவாணர்
   4. சோமசுந்தரப்புலவர்

14. புலவர் பரிசுக்குப் பாடினார். இச்சொல்லியத்தில் கு உருபு ஏற்றுள்ள வேற்றுமைப்பொருள்
   1. துணைக்காரணம்
   2. தகுதி
   3. நட்பு
   4. கோடல் (கொடை)

15. கொடை கொடுத்து துன்பப்பட்டவர் எவருமில்லை. இக்கருத்தை விளக்கும் பழமொழி
   1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
   2. ஈட்டிய பொருளிலும் எழுத்தே உடைமை
   3. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா
   4. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை

16. நாயக்கர் காலத்துச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   1. கலிங்கத்துப்பரணி
   2. சிதம்பர மும்மணிக்கோவை
   3. நளவெண்பா
   4. மூவருலா

17. நீரின்றிப் பயிர்கள் வாடின. வாடின என்பது
   1. படர்க்கை, ஒருமை
   2. முன்னிலை, பன்மை
   3. படர்க்கைப் பன்மை
   4. முன்னிலை, ஒருமை

18. மாணவர்கள் சுண்டல் உண்டனர். இதில் சுண்டல் உண்டனர் என்பது
   1. பொருளாகுபெயர்
   2. குணவாகுபெயர்
   3. தொழிலாகுபெயர்
   4. காலவாகுபெயர்

19. தமிழர் மீதான சிங்கள அரசின் முதலாவது திட்டமிட்ட பெரும் இனவழிப்பு
   1. கல்லோயாப் படுகொலை
   2. செஞ்சோலைப் படுகொலை
   3. குமுதினிப் படகுப் படுகொலை
   4. யூலைப் படுகொலை

20. வார்க்கா முகில் என்பதன் சொற்பொருள்
   1. கருமையான முகில்
   2. மழையைப் பொழியும் முகில்
   3. மழையைப் பொழியாத முகில்
   4. வெண்மையான முகில்

21. செம்மண் என்பது
   1. வினைத்தொகை
   2. பண்புத்தொகை
   3. அன்மொழித்தொகை
   4. உம்மைத்தொகை

22. நாற்பொருள் என்பதைப் பிரித்து எழுதினால்
   1. நன்மை + பொருள்
   2. நான்கு + பொருள்
   3. நாற் + பொருள்
   4. நாலு + பொருள்

23. செம்மொழிக்குரிய அடிப்படைத் தகுதிப்பாடுகளின் எண்ணிக்கை
   1. பதினொன்று
   2. பத்து
   3. எட்டு
   4. பன்னிரண்டு

24. மகிழினி தோட்டத்தில் கொய்த பூக்களை மாலையாகக் கட்டினாள். இச்சொல்லியத்தில் கொய்த என்பது
   1. வினையெச்சம்
   2. அடைமொழி
   3. செயப்படுபொருள்
   4. பெயரெச்சம்

25. பூனை எலியைப் பிடிப்பதற்காக வந்தது. இச்சொல்லியத்துக்குப் பொருத்தமான அடுக்குத்தொடர்
   1. பயந்து பயந்து
   2. தாவித்தாவி
   3. பதுங்கிப்பதுங்கி
   4. நடுங்கி நடுங்கி

26. அறுபத்துநான்கு கலைகளையும் கசடறக் கற்ற ஈழத்தமிழ் மன்னன்
   1. இராவணன்
   2. கயிலைவன்னியன்
   3. பண்டாரவன்னியன்
   4. சங்கிலியன்

27. காவல், கூர்மை, மணம் போன்ற பல குணங்களை உணர்த்தும் ஓர் உரிச்சொல்
   1. உறு
   2. கடி
   3. கூர்
   4. நனி

28. 1976ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநாடு நடைபெற்ற இடம்
   1. மட்டக்களப்பு
   2. மன்னார்
   3. வட்டுக்கோட்டை
   4. கோப்பாய்

29. ஆயினும், ஆனால், ஆகவே, ஏனென்றால் போன்றன
   1. உவமை உருபுகள்
   2. இடைநிலைகள்
   3. விகுதிகள்
   4. இணைப்பிடைச் சொற்கள்

30. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டது
   1. 1981
   2. 1971
   3. 1983
   4. 1974

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30 X 1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மழையைக் காணாத உழவன் ஒருவனின் வாழ்க்கையைத் துல்லியமாகக் கூறும் கவிதை எது? எழுதியவர் யார்?

2. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதற்கான காரணங்களுள் ஒன்றை எழுதுக.

3. நாம் எதை உரைக்கவேண்டுமெனக் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறுகிறார்?

4. தமிழ்மக்களின் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராட்டம் தோன்றுவதற்கான முதன்மைக் காரணிகளுள் ஒன்றை எழுதுக.

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   3ஆம் வேற்றுமைத்தொகை:

   உயர்வுநவிற்சி அணி:

6. இரண்டாம் வேற்றுமை - அழித்தல் பொருளை உணர்த்தும் சொல்லியம் ஒன்று எழுதுக.

7. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   அகச்சுட்டு:

   அகவினா:

   இயற்சொல்:

   தொழிற்பெயர்:

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. தாவிடும் அலையே! தாயகம் செல்வாயா? என்று தொடங்கி, எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

2. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



3. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

> 'இசை' எனல் கருத்துடன் ஓசையும் இசைவதாம்
> 'கற்றலில் கேட்டலே நன்றெ'னும் கட்டுரை
> படிப்பிற்கு மட்டுமா? பாட்டிற்கும் உண்டு.
> படித்துக் கற்றிடும் அறிவைப் பார்க்கினும்
> கேட்டுக் கற்றிடும் அறிவே கெட்டியாம்.

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

தமிழர் தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர். தமது பிள்ளைகளையும் அவ்வகையில் வளர்க்கின்றனர். அவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் நற்பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். பெரியோரை மதித்தல், பிறருக்கு உதவுதல், பகிர்ந்து உண்ணுதல், தம்மையும் தம்மைச் சுற்றியுள்ள இடங்களையும் தூய்மையாக வைத்திருத்தல் போன்ற நற்செயல்களைச் சிறு அகவையிலிருந்தே அவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் குமுகத்துக்கு நல்ல வழிகாட்டிகளாக இருப்பார்கள். தாயகத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் உறவுகளுக்கு உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கும் கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்கும் மனமுவந்து உதவும் இளையோர் தொகை இன்று அதிகரித்து வருகிறது. புலம்பெயர்நாடுகளில் பிறந்து வளர்ந்தவர்களின் இச்செயற்பாடானது பெற்றோருக்கு மகிழ்வைத் தருகிறது. அத்துடன் தாம் தமது பிள்ளைகளைப் பண்பாட்டு விழுமியங்களோடு வளர்த்துள்ளோம் என்ற மனநிறைவையும் அவர்களுக்குக் கொடுக்கிறது.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

One day at noon, two friends sat down under a tree due to tiredness from a lengthy walk in the sun. Then, it started raining. Suddenly, a beautiful rainbow appeared in the sky. Seeing the seven colors in it, they were both delighted. One of them said that the seven colors in sunlight appear as a rainbow. Another said that rainbows appear only when rain and sunshine come together. Thus, they went home talking about the rainbow.

**யேர்மனி:**

Es war Mittagszeit. Zwei Freunde saßen erschöpft unter einem Baum, weil sie lange in der Hitze gelaufen waren. Dann fing es an zu regnen. Plötzlich erschien am Himmel ein wunderschöner Regenbogen. Als sie darin die sieben Farben sahen, waren beide voller Freude. Einer von ihnen behauptete, der Regenbogen entstehe aus den sieben Farben der Sonnenstrahlen. Der andere behauptete, dass der Regenbogen durch das Zusammentreffen von Regen und Sonnenlicht zustande kommt. So unterhielten sie sich über den Regenbogen und gingen nach Hause.

**நோர்வே:**

En formiddag satte to venner seg under et tre, etter å ha blitt slitne av å ha gått lenge i solen. Da begynte det å regne. Plutselig kom det en fin regnbue på himmelen. De så alle syv fargene og ble glade. En av dem sa at solas syv farger kommer frem som en regnbue. Den andre sa at regnbuen bare oppstår når det både regner og er sollys. Begge gikk hjem pratende om regnbuen.

**இத்தாலி:**

Un giorno di mezzogiorno. Due amici siccome camminarono a lungo sotto il sole si stancarono e si sedettero sotto un albero. In quel momento incominciò a piovere. All'improvviso nel cielo apparve un bel arcobaleno. Vedendo i suoi sette colori, entrambi furono felici. Uno di loro disse che i sette colori della luce del sole appaiono come arcobaleno. L'altro disse che l'arcobaleno appare quando la pioggia e il sole vengono insieme. Così parlando dell'arcobaleno andarono a casa.

**நெதர்லாந்து:**

Op een dag was het tussen de middag. Twee vrienden waren zo moe na het wandelen in de zon, dat ze onder een boom gingen zitten. Toen begon het te regenen. Plotseling kwam er een regenboog. Zij werden allebei blij van de zeven kleuren. Een van hen zei dat de zeven kleuren in het zonlicht verschijnen als een regenboog. De andere zei dat een regenboog verschijnt als er regen en zonneschijn is. Pratend over de regenboog, gingen ze naar huis.

## டென்மார்க்:

En dag ved middagstid. To venner var trætte efter at have gået ude i solen i lang tid og satte sig under et træ. Så begyndte det at regne. Pludselig dukkede en smuk regnbue op på himlen. Da de så de syv farver, blev de begge glade. En af dem sagde, at de syv farver i solens lys fremstår som regnbuer. En anden sagde, at regnbuer kun vises, når regn og solskin mødes. Således gik de hjem mens de talte om regnbuen.

## சுவீடன்:

En dag vid middagstid. Två vänner var trötta och satte sig under ett träd efter att ha gått länge i solen. Då började det att regna. Plötsligt dök en vacker regnbåge upp på himlen. De blev båda glada när de såg de sju färgerna i den. En av dem berättar att de sju färgerna som finns i solljuset framgår i regnbågen. Den andra berättar att regnbågen bara dyker när det är soligt och det regnar samtidigt. På detta sätt gick de hem pratandes om regnbågen.

## பின்லாந்து:

Eräänä päivänä keskipäivällä. Kaksi kaverit kävelevät pitkään auringossa ja istuivat puun alla väsyneinä. Sitten alkoi sataa. Yhtäkkiä taivaalle ilmestyi kaunis sateenkaari. He molemmat nauttivat katsomalla sateenkaaren seitsemän väriä. Yksi niistä sanoi, että sateenkaari ilmestyy auringonvalon seitsemän väriltä. Toinen sanoi, että sateenkaari ilmestyy vain, kun sade ja auringonpaiste kohtaavat. Niinpä he menivät kotiin puhuen sateenkaaresta.

## தமிழ்

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழ் ஒரு செம்மொழி
2. இராவண காவியம்
3. கணினியும் மாந்த வாழ்வும்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - மாந்த வாழ்வில் ஊடகங்களின் பங்கு
   - கணினிப் பயன்பாட்டின் நன்மைகள், தீமைகள்
   - கணினியின் பயன்பாடு பற்றிய உங்கள் கருத்துகள்
4. புலம்பெயர் தமிழரும் அறவழிப் போராட்டங்களும்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - தமிழ்க்கல்வி, பண்பாட்டு விழாக்கள்
   - அமைதிப் பேரணிகள், வணக்க நிகழ்வுகள், நினைவேந்தல்கள்
   - இளையோரின் செயற்பாடுகள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

### 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் கலையை நாம் தற்காப்புக் கலை என்கிறோம். ஆயுதங்களைப் பயன்படுத்தியும் அல்லது ஆயுதங்கள் இல்லாமலும் இதனைப் பயிலலாம். தற்காப்புக் கலைகள் பல வகைப்படுகின்றன. இவற்றுள் மல்யுத்தம், குத்துச்சண்டை, கராத்தே போன்றன ஒரு சிலவாகும். பழந்தமிழரின் தற்காப்புக் கலைகளுள் சிலம்பம் குறிப்பிடத்தக்கது. இது ஒரு வீர விளையாட்டாகும். சிலம்பம் பயில்வோர் நீண்ட தடியைச் சுழற்றி எதிரியிடமிருந்து தம்மைப் பாதுகாக்கும் வகையில் விளையாடுவர். தற்காப்புக் கலையானது பெண்களுக்கு தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் கொடுக்கும். அன்று அரசிகள் தம்மையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தற்காப்புக் கலைகளைப் பயின்றனர். இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கல்வி, வேலை போன்ற பல காரணங்களினால் வெளியில் செல்ல வேண்டிய தேவை உள்ளது. பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொண்டால் இவ்வன்முறைகள் நடக்காமல் தடுக்கலாம். அதற்குப் பெண்கள் தற்காப்புக் கலைகளுள் ஏதாவது ஒன்றைப் பயின்றிருத்தல் மிகவும் அகத்தியமாகும்.

1. தற்காப்புக் கலை என்றால் என்ன? — 1 புள்ளி

______________________________

______________________________

2. தற்காப்புக் கலைகளுள் இரண்டை எழுதுக. — 2 புள்ளிகள்

______________________________

______________________________

3. இக்கலையைக் கற்றுக்கொள்வதால் பெண்களுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை? — 2 புள்ளிகள்

______________________________

______________________________

4. பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? — 2 புள்ளிகள்

______________________________

______________________________

5. சிலம்பத்தை எப்படி விளையாடுவர்? — 2 புள்ளிகள்

______________________________

______________________________

9 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- **உணவகத் திறப்புவிழா**
- **அனைத்துலக உணவுத்திருவிழா**
- **உணவுப்பொருள் அங்காடி திறப்புவிழா**
- **சிற்றுண்டி நாள்**

1. ______________________

பாரிசு நகர் வாழ் மக்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி! அனைத்துலக உணவு வகைகளையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ ஓர் அரிய வாய்ப்பு. ஆண்டுதோறும் பாரிசு நகரில் நடைபெறும் உணவுத்திருவிழா இம்முறையும் 15.06.2024 அன்று மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. எம் தாயகத்தின் மரபுவழி உணவுகளையும் சுவைக்கலாம். நுழைவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது. நீங்கள் சுவைக்க விரும்பும் உணவுகளுக்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும். அனைவரும் திரண்டு வருக! பன்னாட்டு உணவுகளையும் சுவைத்து மகிழ்க!

2. ______________________

அன்பான பெற்றோரே! பழைய மாணவர்களே! எம் அங்கையற்கண்ணி தமிழ்ப்பள்ளியானது தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களுக்குப் பலவழிகளிலும் உதவிவருவது நீங்கள் அறிந்ததே. இம்முறை அவர்களுக்கு உதவுவதற்காகச் 'சிற்றுண்டி நாள்' ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. அன்றையநாள் சுவைமிக்க தாயகச் சிற்றுண்டிகளைச் சுவைத்து மகிழலாம். எமது சிற்றுண்டிச்சாலைக்கு இலவயமாகச் சிற்றுண்டிகளைத் தந்து உதவ விரும்புவோர் பள்ளி நிருவாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் வாழிட நண்பர்களுக்கும் அறியத்தாருங்கள்.

3. ______________________

புலம்பெயர் தமிழ் மக்களே! நீங்கள் நிலம் பெயர்ந்தாலும் தாயக உணவின் சுவையை மறக்கவில்லை என்பதை நாம் அறிவோம். இதோ உங்களுக்காகக் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடைய தாயக உணவுகளை 'ஈழவன் உணவகம்' வழங்கவுள்ளது. 22.07.24 அன்று எமது ஈழவன் உணவகத்தின் கோலாகலத் திறப்புவிழா! சமையலுக்காகக் காய்கறிகள், பழங்கள், சுவைச் சரக்குவகைகள் போன்றனவற்றைத் தாயகத்திலிருந்து தருவிக்கவுள்ளோம். உணவகத் திறப்புவிழாவுக்கு வருகை தாருங்கள்! தாயக உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள்!

3 X 2 = 6 புள்ளிகள்

**குறிப்பு:**

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |